**யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)**
AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001
தொலை பேசி : **044-25358718, 9444058718, 9677048718** மின்அஞ்சல் : **ubeutn@gmail.com**

சுற்றறிக்கை எண்:149:2019 12.09.2019

அன்பார்ந்த தோழர்களே !

# வங்கிகள் இணைப்பை எதிர்த்து தர்னா போராட்டம்

பொதுத்துறை வங்கிகளின் இணைப்பை எதிர்த்து அகில இந்திய வங்கி ஊழியர் சங்கமும், வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பும் பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளனர். இருப்பினும், மத்திய அரசு தொடர்ந்து வங்கிகளை இணைத்து வருகிறது. கடைசியாக 10 வங்கிகள் 4 வங்கிகளாக இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த 11.09.2019 அன்று நடைபெற்ற வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் கூட்டத்தில் இது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. 31.08.2019 அன்று அகில இந்திய அளவில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, இணைக்கப்படும் வங்கிகளுக்கு முன்பாக போராட்டங்கள் நடைபெற்றன.

பொதுத்துறை வங்கிகள் இணைப்பை எதிர்த்து வரும் 20.09.2019 அன்று புதுதில்லியில் பாராளுமன்றத்திற்கு முன்பாக மாபெரும் தர்னா போராட்டத்தை நடத்திட வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது. அன்று நமது பிரதிநிதிகள் மத்திய நிதியமைச்சரைச் சந்தித்து, நமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் அறிக்கையை அளிக்கவுள்ளனர். வரும் 20.09.2019 அன்று வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு கூடி, மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யவுள்ளது.

## <u>செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகை:</u>

ஊதிய உயர்வுக்கு அப்பாற்பட்டு, வங்கிகளின் செயல்திறன் அடிப்படையில் ஊக்கத்தொகை வழங்க இந்திய வங்கிகள் சங்கம் முன்வந்துள்ளது. வங்கிகளின் மொத்த லாபம் (Operating Profit) மற்றும் சொத்துக்கள் மீதான வருமானம் (Return on Assets) ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஊக்கத்தொகை அமையவுள்ளது. இது குறித்து விவாதித்து முடிவு செய்ய, இந்திய வங்கிகள் சங்கம், தொழிற்சங்கங்களுடன் இணைந்து ஒரு குழுவை அமைக்க முன்வந்து, அந்தக் குழுவில் தொழிற்சங்கங்களின் சார்பில் 4 உறுப்பினர்கள் இருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது. இந்த நிலையில், வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பும் அனைத்து உறுப்பினர்களும் உள்ள கூட்டத்திலேயே இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று இந்திய வங்கிகள் சங்கத்திற்கு தெரிவித்துள்ளது. அந்தக் கடிதத்தின் உள்ளடக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

"**<u>FORMATION OF THE COMMITTEE TO DISCUSS ON THE PERFORMANCE LINKED INCENTIVE RELATED TO 11TH BIPARTITE SETTLEMENT</u>**

This has reference to our earlier communication to you vide our letter No.UFBU/2019/9 dated 31.08.2019 in response to your letter No.HR&IR/SKK/UFBU/7820 Dated 30.08.2019 regarding formation of Sub-Committee on Performance Linked Incentive scheme.

As stated in our above referred letter the issue was discussed at length in our UFBU meeting held on 11.09.2019 at New Delhi. Arising out of the deliberations in the meeting, we are of the view that introduction of the proposed Performance Linked Incentive Scheme should be exclusively over and above the mutually agreed quantum in wage revision.

Subject to the above, UFBU would like to discuss only the scheme of Performance Linked Incentive as proposed by the IBA and the discussions on the issue can be part of the regular Bipartite discussions where all the constituent unions would be present instead of discussing it in a smaller committee as proposed by IBA so that benefit of the views and inputs of all the constituent unions would be available.

In view of the above, we request you to kindly take our viewpoints and accordingly discuss the issue further in the ensuing meetings of IBA.

The meeting strongly felt that the entire wage revision exercise should be expedited and further delay should be avoided as employees and officers are anxiously looking forward to the same. The meeting also expressed the view that the issue of mandate should be resolved amicably and IBA should also substantially improve the offer so that wage revision settlement can be concluded at the earliest.

We look forward to the next round of meeting to be fixed very soon to take the discussions forward."

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**

## யூனியன் வங்கி ஊழியர் சங்கம் - யூனியன் வங்கி அதிகாரிகள் சங்கம்

## இணைந்த மாநாடு

### சேலம் - 14,15 செப்டம்பர் 2019

| | |
|---|---|
| துவக்க உரை : | தோழர். **C.H.வெங்கடாசலம்**, பொதுச்செயலாளர், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் |
| சிறப்பு அழைப்பளர்கள் : | திரு. **லால் சிங்**, பொது மேலாளர், யூனியன் வங்கி, சென்னை மண்டலம் |
| | தோழர். **N.சங்கர்**, பொதுச்செயலாளர், அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கம் |
| | தோழர். **S.நாகராஜன்**, பொதுச்செயலாளர், அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கம் |
| | தோழர். **E.அருணாச்சலம்**, பொதுச்செயலாளர், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் |
| | திரு. **E. புல்லா ராவ்,** பிராந்திய தலைவர், யூனியன் வங்கி, சென்னை பிராந்தியம் |
| | திரு. **ஸ்ரீநிவாஸ் வங்கலா**, பிராந்திய தலைவர், யூனியன் வங்கி, மதுரை பிராந்தியம் |
| | திரு. **வெகா ரமேஷ்,** பிராந்திய தலைவர், யூனியன் வங்கி, கோவை பிராந்தியம் |
| | திரு. **U.V.ரஜனிகாந்த ராவ்,** பிராந்திய தலைவர், யூனியன் வங்கி, சேலம் பிராந்தியம் |
| | தோழர். **A.P.வெங்கடசுப்பிரமணியன்**, பொதுச்செயலாளர், யூனியன் வங்கி அதிகாரிகள் சங்கம் |
| | தோழர். **G.ரமேஷ் ராவ்**, பொதுச்செயலாளர், யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (கேரளா) |
| | தோழர். **R.D.பட்நாயக்**, பொதுச்செயலாளர், யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (ஆந்திரா) |
| | தோழர். **M.B.ரகோத்தமா**, பொதுச்செயலாளர், யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (கர்நாடகம்) |
| | தோழர். **N.கோவிந்தராஜுலு**, பொதுச்செயலாளர், யூனியன் வங்கி ஒய்வுபெற்றோர் சங்கம் |
| | தோழர். **Dr.ஸ்ரீதர்**, தலைவர், யூனியன் வங்கி ஒய்வுபெற்றோர் சங்கம் (தமிழ்நாடு) |
| | தோழர். **A.சண்முகசுந்தரம்**, பொதுச்செயலாளர், யூனியன் வங்கி SC/ST ஊழியர் நலச்சங்கம் |

**அனைவரும் வருக !**